


# மாய வலை

பா.ராகவன்

அமெரிக்காவில் உலக வர்த்தக மையம் தகர்ப்புத் திட்டம். அங்கிருந்து தப்பித்து பாகிஸ்தான் வந்து இறங்கி, ஒரு டீ சாப்பிடும் நேரத்துக்குள் பேனசிர் புட்டோவைப் போட்டுத் தள்ளமுடியுமா என்று முயற்சி. வைத்த குண்டுக்கு இசகுபிசகாகத் தானே அகப்பட்டு குற்றுயிரும் கொலை உயிருமாகத் தப்பித்து, கொஞ்சம் சுகமானதும் பாங்காக்குக்குப் போய் சாகசம் செய்ய மேலும் ஒரு முயற்சி.

ரம்ஸி யூசுஃப் என்கிற தனித் தீவிரவாதி எப்பேர்ப்பட்டவன் என்பதை, அவனது வாழ்வின் இந்த ஒரு பாகம் மட்டுமே விளக்கிவிடக் கூடும். அவனது திருப்பணிகளைப் பார்த்து எப்படி அல் காயிதா கவலைப்பட்டதோ, அதே மாதிரி அவனது மாமாவான சீனியர் தீவிரர் காலீத் ஷேக் முகம்மதுவும் ரொம்பக் கவலைப்பட்டார். வாலிப வயசு. துறுதுறுப்பாக என்னென்னவோ பண்ணுகிறான். எங்காவது சிக்கி, பொசுக்கென்று போய்விடக் கூடாதே என்கிற கவலையில், யூசுஃப் பாங்காக் புறப்படவிருந்த தினத்துக்கு முன் தினம் மாலை, அவனுக்கு ஒரு போன் செய்தார்.

'சாகசக்கார மருமகனே, நான் சௌக்கியம். நீ சௌக்கியமா? அடுத்த திட்டத்துக்குத் தனியே போகாதே, மாமன் நான் இருக்கிறேன், நான் உன் கூட வருகிறேன். ஒரு நாள் பொறுத்திரு' என்று சொல்லிவிட்டு, அதுவரை சமர்த்துப் பிள்ளை போல், பார்த்துக்கொண்டிருந்த குவைத் மின்சார வாரியப் பொறியாளர் உத்தியோகத்துக்கு ஒரு லாங் லீவு போட்டுவிட்டு விமானத்தைப் பிடித்து கராச்சிக்குப் போய் இறங்கிவிட்டார்.

யூசுஃப் அவரிடம் தன் திட்டத்தைச் சொன்னான். கிழக்காசிய நாடுகளில் பல பெரும்பாலும் அமெரிக்க அடிவருடிகளாக இருக்கின்றன. அமெரிக்காவில் நேரடிச் செயல்களில் இறங்குவது எத்தனை அவசியமோ, அதேமாதிரி இந்தத் தேசங்களுக்கும் கொஞ்சம் அதிர்ச்சி வைத்தியம் தருவது அவசியம். முதல்கட்டமாக தாய்லாந்தின் தலைநகர் பாங்காக்கில் உள்ள இஸ்ரேலிய தூதரகத்தில் ஒரு கொழுக்கட்டை வைக்க உத்தேசம் என்று தெரிவித்தான். அமெரிக்க உலக வர்த்தக மையக் கட்டடத்தில் வைத்த அதே கொழுக்கட்டை.

'சரி, போகலாம் வா' என்று காலீத் ஷேக் முகம்மதுவும் அவனுடன் புறப்பட்டார். இருவரும் ஒருமுறை பாங்காக் போய் வெள்ளோட்டம் பார்த்துவிட்டுத் திரும்பினார்கள். மறுமுறை யூசுஃப், தன் மாமாவை பாகிஸ்தானிலேயே விட்டுவிட்டு வேறு ஒரு தீவிர பிரகஸ்பதியுடன் போனான். அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டது போன்ற அதே வெடிகுண்டு. சிலிண்டரில் அடைத்து, வண்டியில் எடுத்துச் சென்று வைத்துப் பற்றவைத்துவிட்டுப் பன்னிரண்டு நிமிடங்களுக்குள் திரும்பிவிடவேண்டிய திட்டம்.

இம்முறை அவன் அழைத்துச் சென்ற நபரின் பெயர் இஷ்டாக் பார்க்கர். (Istaique Parker).

இவன் ஒரு தென்னாப்பிரிக்க முஸ்லிம். பிழைப்புத் தேடி பாகிஸ்தானுக்கு வந்து செட்டில் ஆனவன். ரம்ஸி யூசூஃப் ஒரு பிழைப்புத் தருவதாகச் சொன்னபோது, உடனே சம்மதித்து, உதவி செய்யப் புறப்பட்டான்.

ஆனால், பாங்காக் இஸ்ரேலிய தூதரகத்துக்கு அதிர்ஷ்டவசமாகவும், யூசூஃபுக்கு துரதிருஷ்டவசமாகவும் மேற்படி குண்டை வைத்த சில வினாடிகளிலேயே அவர்கள் காவல் துறையினரிடம் அகப்பட்டுக்கொண்டார்கள்.

அது ஒன்றும் பேனசிர் வீட்டு வாசலில் வைத்தது போன்ற வெங்காய வெடி அல்ல. திரும்பப் போய்ச் செயலிழக்கச் செய்வதெல்லாம் உடம்புக்கு நல்லதுமல்ல. ஆகவே, சடாரென்று தாவித் திமிறி, தப்பித்துப் பாய்ந்து ஓடிக் காணாமல் போவதொன்றே வழி.

அப்படியே செய்தார்கள். நல்ல வேளையாக குண்டு வெடிப்பதற்கு முன்னதாகச் செயலிழக்கச் செய்யப்பட்டுவிட்டது என்பது ஒருபுறமிருக்க, கொஞ்ச நாளைக்கு பாங்காக்கில் இருப்பது கஷ்டம் என்று முடிவு செய்து, ரம்ஸியும் அவன் நண்பனும் உடனடியாக பாகிஸ்தானுக்குத் திரும்பிவிட்டார்கள்.

என்னடா இது சோதனை, எதை ஆரம்பித்தாலும் அரைகுறையாகப் போய்விடுகிறதே என்கிற கவலை ஒரு பக்கம் யூசூஃபை வாட்டிக்கொண்டிருக்க, அப்போதுதான் காலீத் ஷேக் முகம்மது அவனுக்கு ஓர் இயக்கத்தின் பின்னணி பலம் இத்தகைய நாச காரியங்களுக்கு எத்தனை அவசியம் என்று தீதோபதேசம் செய்தார். ரம்ஸி யூசூஃபும் கிட்டத்தட்ட அந்த முடிவுக்குத்தான் அப்போது வந்திருந்தான். ஆகவே, அதிகத் தாமதமின்றித் தன் மாமா மூலமே அல் காயிதா தலைமைக்குத் தான் கட்டுப்பட விரும்புவதைத் தெரிவித்தான்.

சும்மா சொன்னால் போதுமா? புதிதாக இன்னொரு ப்ராஜக்ட் ரிப்போர்ட்டையும் எழுதி அனுப்பினான். (நமக்கு) உலகின் கிழக்குக் கோடியான பிலிப்பைன்ஸிலிருந்து மேற்கு எல்லையான அமெரிக்காவுக்கு, நம்முடைய முதுகுப் பக்கமாகச் சுற்றிக்கொண்டு போகும் ஒரு விமான ரூட்டைப் பிடித்தான். பசிபிக் பெருங்கடல், தெற்கு சீனக் கடல் வழிக்கு மேலே பறக்கும் அமெரிக்கன் ஏர்லைன்ஸ் விமானங்கள் ஒன்றல்ல, இரண்டல்ல - குறைந்தபட்சம் ஐந்து விமானங்களைக் குறிவைத்துத் தகர்ப்பதுதான் திட்டத்தின் முதல் கட்டம்.

இரண்டாவது கட்டமாக, ஒட்டுமொத்த கிழக்காசிய நாடுகளிலும் ஒரே சமயத்தில் திடீரென்று கொரில்லா போலக் களமிறங்கி, பல்லாயிரக்கணக்கான பொதுமக்களைக் கொன்று போடுவது. யார், எதற்காகத் தாக்குகிறார்கள் என்றே தெரியாத நிலையில், தாக்குதலை முடித்துவிட்டுப் போய்விடுவது. இதற்குப் பல நூற்றுக்கணக்கான போராளிகள் வேண்டியிருக்கும். அது ஒரு பிரச்னையில்லை; பல்வேறு இயக்கங்களிலிருந்து பொறுக்கியெடுத்துக்கொள்ளலாம் என்பது அவனது திட்டம்.

மூன்றாவது கட்டமாக, 1995-ம் ஆண்டு சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு பிலிப்பைன்ஸுக்கு வருகை தருவதாக இருந்த (மறைந்த) போப் ஜான்பால் - 2 ஐ, மணிலாவில் வைத்துக் கொல்வது.

தன்னுடைய இந்த மூன்று கட்டத் திட்டத்துக்கு 'ஆபரேஷன் போஜிங்கா' (Operation Bojinka) என்று பெயர் வைத்தான் யூசூஃப். இதை நேரடியாகத் தமிழாக்கினால், பி அண்ட் சி சென்டர் தியேட்டர்களில் திரையிடப்படும் தமிழாக்க ஆங்கிலப் பட டைட்டில் போலிருக்கும். மிரட்டல் அதிரடி அல்லது உலகை உலுக்கும் ஊழிச் சத்தம் என்று ஏதாவது சொல்லலாம்.

திட்டமும் யூசூஃபின் விருப்பமும் ஒசாமா பின்லேடனிடம் போய்ச் சேர்ந்தது. உடனடியாகப் பொருளாதார வல்லுநர்கள் வரவழைக்கப்பட்டார்கள். மொத்த திட்டத்துக்குமாகச் சேர்த்து என்ன

செலவாகும் என்று கணக்கிடப்பட்டது. எத்தனை ஆள் பலம் வேண்டியிருக்கும் என்று யோசித்தார்கள். ரிஸ்க் சதவிகிதம் கணக்கிடப்பட்டு, திட்டத்தின் ஒரு பகுதி முதலீட்டாளராக ஜமா இஸ்லாமியா அமைப்பின் தலைவர் ஹம்பாலி இதில் இணைத்துக்கொள்ளப்பட்டார். தவிரவும், கிழக்காசிய நாடுகளில் இப்படியொரு காரியம் செய்ய உத்தேசித்துவிட்டு, ஜமா இஸ்லாமியாவின் துணை இல்லாமல் அதைச் செய்யவும் முடியாது.

இந்தத் திட்டத்தின் கடைசி நேர முதலீட்டாளராக, நாம் முன்னர் பார்த்த ஒசாமா பின்லேடனின் மாப்பிள்ளை (சகோதரியின் கணவர்) முஹம்மது ஜமால் காலிஃபா என்கிற அபூ பாராவும் இணைந்துகொண்டதாகச் சில தகவல்கள் தெரிவிக்கின்றன. இது உறுதியான தகவல் என்று சொல்லமுடியாது.(போதிய ஆதாரமில்லை.)

ஆக, திட்டம் தயார். நிதி தயார். (மூன்று திட்டங்களுக்குமாகச் சேர்த்து அறுபத்தைந்து லட்சம் டாலர் செலவிட முடிவு செய்ததாகத் தெரிகிறது.) முன்னின்று நடத்திக்கொடுக்க ரம்ஸி யூசுஃப் தயார். மாண்புமிகு மாமா காலீத் ஷேக் முகம்மது மிகவும் தயார். இதற்கு மேல் என்ன வேண்டும்?

ரம்ஸி யூசுஃப் தனக்கு நம்பகமான சில நண்பர்களை அழைத்துக்கொண்டு பிலிப்பைன்ஸுக்குப் போய்ச் சேர்ந்தான். அழைத்துச் சென்றவர்களில் இஷ்டாக் பார்க்கரைத் தவிர்த்து, மற்ற அனைவரையும் அங்கேயே விட்டுவிட்டு, அவர்கள் இருவர் மட்டும் மீண்டும் பாங்காக்குக்கு வந்தார்கள். முன்னதாக இத்திட்டத்துக்காக அல் காயிதா அனுப்பியிருந்த ஆள்களும் பிலிப்பைன்ஸ் போய்ச் சேர்ந்து, ஜமா இஸ்லாமியா தோழர்களுடன் ஐக்கியமாகியிருந்தார்கள்.

பாங்காக்குக்குப் போன ரம்ஸி யூசுஃப், அங்கே ஒரு ஹோட்டலில் அறையெடுத்துத் தங்கி, திட்டத்துக்குத் தேவையான வெடிகுண்டுகளைத் தயாரிக்கும் பணியில் பார்க்கருடன் சேர்ந்து ஈடுபட்டான். ஒரு மாதிரி முதல் குண்டு தயாரானது. ஆனால், ஒழுங்காக வெடிக்குமா? கலவை சரியாக இருக்குமா? எங்காவது சொதப்பித் தொலைத்தால் என்னாவது?

ஆகவே, செய்த குண்டை ஒரு மாதிரி குண்டு போலக் கருதி எடுத்துக்கொண்டு அங்கிருந்து மணிலாவுக்குப் போனான். அங்குள்ள கிரீன்பெல்ட் (Greenbelt) என்கிற சினிமா தியேட்டரில் ஏதோ ஒரு பாடாவதி படத்துக்கு டிக்கெட் வாங்கிக்கொண்டு உள்ளே போய் நாற்காலிக்கு அடியில் குண்டை வைத்தான். சரியாக வெடிக்க நேரம் செட் பண்ணிவிட்டு சமர்த்தாக எழுந்து வெளியே வந்துவிட்டான்.

அந்த குண்டு வெடித்தது. பலபேர் இறந்தும் போனார்கள். ஆனால், ஒரு விமானத்தைத் தகர்ப்பதற்கான வல்லமை அதற்கு இருக்குமா? என்று அவனுக்குச் சந்தேகம் வந்தது. ஆகவே, மீண்டும் பாங்காக் வந்து இன்னொரு குண்டைத் தயாரித்தான். அதுவும் அவனுக்கு அத்தனை திருப்தியளிக்கவில்லை. அவன் தயாரிக்க நினைத்த சக்தி மிக்க குண்டின் பத்தில் ஒரு பங்கு சக்தியே அதற்கு இருக்கும் என்று நினைத்தான்.

ஆகவே, மூன்றாவதாகவும் ஒரு குண்டைத் தயாரித்தான். அது கொஞ்சம் திருப்தியாக இருந்திருக்கும் போலிருக்கிறது. அதே காம்பினேஷன் கலவையில் மேலும் இரண்டு குண்டுகளைச் செய்து எடுத்துக்கொண்டு மணிலாவுக்குப் போகலாம் என்று பார்க்கருடன் புறப்பட்டான்.

அந்த ஆப்பிரிக்க பார்க்கருக்கு, அப்போது திடீரென்று உடம்புக்குச் சுகமில்லாமல் ஆகிவிட்டது. ஃப்ளூ மாதிரி ஏதோ ஒரு ஜுரம். தவிரவும் திட்டத்தின் பிரமாண்டமும் அவனுக்கு மிகுந்த அச்சமூட்டிக்கொண்டிருந்தது. தான் மாட்டிக்கொண்டுவிடுவோம் அல்லது மண்டையைப் போட்டுவிடுவோம் என்று நிச்சயமாக நம்பினான். ஆகவே, ரம்ஸி யூசுஃபிடம் தன்னால் வரமுடியாது, பயமாக இருக்கிறது என்று சொல்லிவிட்டான்.

உடம்பு சரியில்லாதவனைச் சரிபண்ணிவிட முடியும். பயந்து நடுங்கும் கோழையை என்ன செய்வது?

ஆகவே, ரம்ஸி யூசுஃப் அவனை பாகிஸ்தானுக்குப் பத்திரமாக விமானம் ஏற்றி அனுப்பிவிட்டுத் தான் மட்டும் மணிலாவுக்குப் புறப்பட்டான்.

அவன் மணிலா போய்ச் சேர்ந்ததற்கு நான்கு மணிநேரம் கழித்து பார்க்கர் பாகிஸ்தானில் கராச்சி விமான நிலையத்துக்கு வந்து இறங்கினான். இறங்கிய கணத்தில் அவனுக்கு மிகுந்த நிம்மதியாக இருந்தது. அப்பாடா, தப்பித்தோம்!

ஒரு ஓட்டலுக்குப் போய் ரூம் எடுத்துத் தங்கினான். நன்கு குளித்துவிட்டு டிபன் சாப்பிட்டான். டிரெஸ் பண்ணிக்கொண்டு ஹோட்டல் அறையைப் பூட்டிக்கொண்டு வெளியே வந்தான். பக்கத்தில் உள்ள ஒரு நண்பனைப் போய்ப் பார்த்துவிட்டு, அன்று மாலையே இஸ்லாமாபாத்துக்குப் போவதுதான் அவன் திட்டம்.

சாலையில் இறங்கியவன் கண்களில் அந்த போஸ்டர் பட்டது. ரம்ஸி யூசுஃபின் புகைப்படத்துடன் அவன் தலைக்கு இரண்டு மில்லியன் டாலர் விலையும் வைத்து, அமெரிக்க அரசு பாகிஸ்தான் காவல்துறை மூலம் ஒட்டியிருந்த போஸ்டர்.

பார்க்கருக்குத் தூக்கிவாரிப் போட்டுவிட்டது. நேற்று வரை அவன் கூடவே இருந்த ஒருவன். ஒரே அறையில் தங்கி, ஒன்றாக வேலை செய்து, ஒன்றாகச் சாப்பிட்டு, தூங்கி, சிரித்துப் பேசி...

அவன் தலைக்கு இரண்டு மில்லியன் டாலர்!

பிழைக்க வழியற்று ஆப்பிரிக்காவிலிருந்து பாகிஸ்தானுக்கு ஓடிவந்த பார்க்கர், அப்போது திருவிளையாடல் தருமி நிலையில் இருந்தான். சொக்கா, இரண்டு மில்லியன்! குற்றம் குறை தன் பக்கத்திலும் இருக்கிறது. அதற்கேற்பக் கொஞ்சம் குறைத்துக்கொண்டாவது தொகையைக் கொடுத்துவிடுவார்களேயானால், ஊருக்குப் போய் பிள்ளைகுட்டிகளுடன் நிம்மதியாக வாழலாமே? என்னத்துக்கு இந்தத் தீவிரவாதமும் மண்ணாங்கட்டியும்?

பார்க்கர் அந்தக் கணமே தன் நண்பனைக் கைகழுவ முடிவு செய்தான். கராச்சி நண்பனைப் பார்க்கும் திட்டத்தையும் கேன்சல் பண்ணிவிட்டு, நேரே ஐ.எஸ்.ஐ அலுவலகத்தைத் தேடிப் போனான்.

"என் பெயர் இஷ்டாக் பார்க்கர். எனக்கு ரம்ஸி யூசுஃபைத் தெரியும். காட்டிக்கொடுத்தால் அந்த இரண்டு மில்லியன் டாலரை எனக்குத் தருவீர்களா?" என்று கேட்டான்.

பார்க்கருக்கு இரண்டு மில்லியன் டாலர் கிடைத்ததா என்று தெரியவில்லை. ஆனால், ரம்ஸி யூசுஃப் மாட்டிக்கொண்டான்.